## இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2016

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 75,948 பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றில் ஒப்பீட்டு ரீதியாக காண்பிக்கும் போது செலுத்த வேண்டிய வட்டியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 16,329,679 முகப்பெறுமதியான திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 14,852,534 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 11,611,846 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,793,718 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,818,128 அதிகரித்திருந்தது. திறைசேரி உண்டியல்களிற்கான வட்டி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 3,861,539 ஆல் அதிகரித்தமையே மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியினருக்கு நலன்களை வழங்குவதற்கு சேமலாப நிதியங்கள் தொடர்பான

கட்டுப்பாட்டு, பரிசீலனை மற்றும் முகாமைத்துவத்திற்காக 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் பங்களிப்புக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட வட்டி ரூபா 11,608,963 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 7,798,968 ஆக இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நலன்களின் அளவு 49 சதவீத அதிகரிப்பொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. செலுத்தப்பட்ட நலன்கள் நிதியத்தின் முதலீட்டு வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் ஆண்டிற்காண்டு அது முரண்பட்டு இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

சேமலாப நிதிய நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கான கட்டளைகளை வழங்கும் அதிகாரம் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் நிதியத்தின் பங்களிப்பாளர்களுக்கு பங்களிப்புக் கணக்கின் மீதியில் 60 சதவீதம் வட்டி இன்றி 10 வருடங்களில் மீளச் செலுத்தும் காலத்திற்காக கடன் வழங்குவதற்கு கட்டளை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,538,828 தொகை 88 ஊழியர்களுக்கு கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித வட்டி அறவிடப்படாமையின் காரணமாக நிதியத்தின் அபிவிருத்திக்கு அது பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான நலிவுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் சங்கைக்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| (அ) | நிர்வாக செலவினத்தை உள்ளீர்ப்புச் செய்தல் | நிர்வாகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக நியாயமான நிர்வாகச் செலவினமொன்று நிதியத்திற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஊழியர் கடன் | ஊழியர்களுக்கு கடன் வழங்கும் எல்லையொன்று காணப்படாமையால் நிதியத்தின் வளர்ச்சிக்கு தாக்கம் ஏற்பட்டமை. |